

2026 சட்டமன்ற பொதுத்தேர்தலில் போட்டியிடும் கழக வேட்பாளர்களின் பட்டியலை அறிவித்த பிறகு, கழகத் தலைவரும், முதலமைச்சருமான மு.க.ஸ்டாலின் நேற்று முன்தினம் (28.3.2026) சென்னை மெரினா கடற்கரையில் பேரறிஞர் அண்ணா அவர்களின் நினைவிடத்தில் மலர்தூவி மரியாதை செலுத்தினார். உடன் கழகப் பொருளாளர், நாடாளுமன்ற உறுப்பினர் டி.ஆர்.பாலு, முதன்மைச் செயலாளர், நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் கே.என்.நேரு, கழக இளைஞர் அணிச் செயலாளரும், துணை முதலமைச்சருமான உதயநிதி ஸ்டாலின், அமைச்சர் பெருமக்கள், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள் மற்றும் கழக நிர்வாகிகள் உள்ளனர்.



2026 சட்டமன்ற பொதுத்தேர்தலில் போட்டியிடும் கழக வேட்பாளர்களின் பட்டியலை அறிவித்த பிறகு, கழகத் தலைவரும், முதலமைச்சருமான மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (28.3.2026) சென்னை மெரினா கடற்கரையில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நினைவிடத்தில் மலர்தூவி மரியாதை செலுத்தினார். உடன் கழகப் பொருளாளர், நாடாளுமன்ற உறுப்பினர் டி.ஆர்.பாலு, முதன்மைச் செயலாளர், நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் கே.என்.நேரு, கழக இளைஞர் அணிச் செயலாளரும், துணை முதலமைச்சருமான உதயநிதி ஸ்டாலின், அமைச்சர் பெருமக்கள், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள் மற்றும் கழக நிர்வாகிகள் உள்ளனர்.

## 2026 சட்டமன்றத் தேர்தல்: வெற்றி வேட்பாளர்கள் பட்டியல்:

# திராவிட மாடல் ஆட்சி மீண்டும் அமைவது உறுதி! உறுதி!

### கழக வேட்பாளர்கள் பட்டியலை வெளியிட்டு

## தலைவர், முதல்வர் மு.க.ஸ்டாலின் உரை!

*சென்னை, மார்ச் 30 –*

**நடைபெறவுள்ள சட்டப்பேரவை பொதுத்தேர்தலில் திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் போட்டியிடும் கழக வெற்றி வேட்பாளர்கள் பட்டியலை வெளியிட்டு முதலமைச்சர் கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் ஆற்றிய உரை வருமாறு:–**

நடைபெற இருக்கும் தமிழ்நாடு 17வது சட்டப்பேரவைத் தேர்தலில் திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் போட்டியிடும் வெற்றி வேட்பாளர்கள் பட்டியலை உங்கள் முன்னால் வெளியிடுவதில் நான் பெருமைப்படுகிறேன்.

திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைமையிலான மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணி, நான் பலமுறை சொன்னது போன்று, அரசியல் கூட்டணி மட்டுமல்ல; கொள்கைக் கூட்டணி. கூட்டணி எண்ணிக்கையில் தொகுதிகளைப் பகிர்ந்து கொண்டது ஏற்கனவே அறிவிக்கப்பட்டுள்ளது. அந்த அடிப்படையில், தமிழ்நாடு சட்டப்பேரவையின் 234 தொகுதிகளில் திராவிட முன்னேற்றக் கழக வேட்பாளர்கள் 164 தொகுதிகளில் போட்டியிடுகிறார்கள்.

70 தொகுதிகளைத் தோழமைக் கட்சிகளோடு பகிர்ந்து கொண்டிருக்கிறோம். மொத்தம் உள்ள 234 தொகுதிகளில் கட்சிகளின் வாரியாக போட்டியிடும் தொகுதிகளின் எண்ணிக்கை மட்டும் முதலில் நான் அறிவிக்கிறேன்.

திராவிட முன்னேற்றக் கழகம் - 164 தொகுதிகள்

காங்கிரஸ் கட்சி - 28 தொகுதிகள்

தேசிய முற்போக்கு திராவிட கழகம் - 10 தொகுதிகள்

விடுதலைச் சிறுத்தைகள் கட்சி - 8 தொகுதிகள்

இந்திய கம்யூனிஸ்ட் கட்சி - 5 தொகுதிகள்

மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி - 5 தொகுதிகள்

மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழகம் - 4 தொகுதிகள்

இந்திய யூனியன் முஸ்லிம் லீக் - 2 தொகுதிகள்

மனிதநேய மக்கள் கட்சி - 2 தொகுதிகள்

கொங்குநாடு மக்கள் தேசிய கட்சி - 2 தொகுதிகள்

மனிதநேய ஜனநாயக கட்சி - 1 தொகுதி

முக்குலத்தோர் புலிப்படை - 1 தொகுதி

எஸ்.டி.பி.ஐ. - 1 தொகுதி

தமிழர் தேசம் கட்சி - 1 தொகுதி

என எங்களுக்குள் ஒப்பந்தம் இறுதி செய்யப்பட்டுள்ளது.

தோழமைக்கு ஒதுக்கிய தொகுதிகளுள் 11 தொகுதிகளில் உதயசூரியன் சின்னத்தில் போட்டியிடுகிறார்கள். ஆக மொத்தம் 175 தொகுதிகளில் உதயசூரியன் சின்னமும், 59 தொகுதிகளில் கூட்டணிக் கட்சிகளின் சின்னத்திலும் போட்டியிடுகிறோம்.

தற்போது வரலாற்றிலேயே இல்லாத அளவிற்கு இந்தியாவின் முதன்முதலாக ஆட்சி அமைத்த மாநிலக் கட்சியான திராவிட முன்னேற்றக் கழகத்தின் வேட்பாளர்களைப் பேரறிஞர் அண்ணாவின் சார்பிலும், முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் சார்பிலும் நான் அறிவிக்கிறேன்.

2026 சட்டமன்றத் தேர்தல் வேட்பாளர் பட்டியல்:

இவர்கள் வேட்பாளர்கள் மட்டுமல்ல; வெற்றி வேட்பாளர்கள். திராவிட மாடல் 2.0 ஆட்சி அமையும். இது உறுதி... உறுதி... உறுதி...

இதில் 164 வேட்பாளர்களை நான் அறிவித்திருக்கிறேன். இதுபோக 11 வேட்பாளர்களுக்கும் உதயசூரியன் சின்னம் இருக்கிறது. அது தனித்தனி கட்சி களுக்கு கொடுக்கப்பட்டிருக்கிறது. *Official* ஆக




**திராவிட முன்னேற்றக் கழகம் – 164 தொகுதிகள்**
**காங்கிரஸ் கட்சி – 28 தொகுதிகள்**
**தேசிய முற்போக்கு திராவிட கழகம் – 10 தொகுதிகள்**
**விடுதலைச் சிறுத்தைகள் கட்சி – 8 தொகுதிகள்**
**இந்திய கம்யூனிஸ்ட் கட்சி – 5 தொகுதிகள்**
**மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி – 5 தொகுதிகள்**
**மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழகம் – 4 தொகுதிகள்**
**இந்திய யூனியன் முஸ்லிம் லீக் – 2 தொகுதிகள்**
**மனிதநேய மக்கள் கட்சி – 2 தொகுதிகள்**
**கொங்குநாடு மக்கள் தேசிய கட்சி – 2 தொகுதிகள்**
**மனிதநேய ஜனநாயக கட்சி – 1 தொகுதி**
**முக்குலத்தோர் புலிப்படை – 1 தொகுதி**
**எஸ்.டி.பி.ஐ. – 1 தொகுதி**
**தமிழர் தேசம் கட்சி – 1 தொகுதி**

தி.மு.க. வேட்பாளர்கள் 164 பேரைச் சொன்னேன். அதில், பட்டம் பெற்றவர்கள் 125. பெண்கள் 18 பேர் இடம்பெற்றிருக்கிறார்கள். முனைவர்கள் 7 பேர். மருத்துவர்கள் 15 பேர். பொறியியல் பட்டதாரிகள் 17 பேர். சட்டம் படித்தவர்கள் 29 பேர். அதுமட்டுமல்ல, புதுமுகம் என்று கணக்கெடுத்துக் கொண்டால், 60க்கு மேல் வருகிறது. அதுதான் முக்கியமானது. அனைவரும் அ.தி.மு.க. முன்பே அறிவித்துவிட்டது. தி.மு.க. இன்னும் அறிவிக்கவில்லையே என்று கேட்டார்கள். நாங்கள் கொஞ்சம் லேட்டாக வந்தோம்; ஆனால், லேட்டஸ்ட் ஆக வந்திருக்கிறோம்.

ஏனென்றால் பல கூட்டணிக் கட்சிகள் இருக்கிறது. அனைத்துக் கட்சிகளுடனும் அமர்ந்து பொறுமையாக, அவர்கள் கேட்பது; நாங்கள் சொல்வது; மற்ற கட்சிகள் கேட்பது என்றெல்லாம் இருந்தது. அவை அனைத்தையும் சரிசெய்து, அனைவரையும் திருப்தி செய்து, அனைவரும் திருப்தியாக ஒப்புக்கொண்டு, அதன்பிறகு கையொப்பமிட்டு, அந்த அடிப்படையில் தான் செய்திருக்கிறோமே தவிர, வேறு ஒன்றும் இல்லை. காலம் தாழ்த்தப்படவில்லை.

இவ்வாறு தலைவர், முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் குறிப்பிட்டார்.

> **பட்டம் பெற்றவர்கள் 125. பெண்கள் 18 பேர் இடம்பெற்றிருக்கிறார்கள். முனைவர்கள் 7 பேர். மருத்துவர்கள் 15 பேர். பொறியியல் பட்டதாரிகள் 17 பேர். சட்டம் படித்தவர்கள் 29 பேர். அதுமட்டுமல்ல, புதுமுகம் என்று கணக்கெடுத்துக் கொண்டால், 60க்கு மேல் வருகிறது.**



திருச்சியில் கழக முதன்மைச் செயலாளரும், நகராட்சி நிர்வாக துறை அமைச்சருமான கே.என்.நேரு, மறைந்த தொழில் அதிபர் ராமஜெயம் அவர்களின் 14ஆம் ஆண்டு நினைவு நாளை முன்னிட்டு கேர் கல்லூரியில் உள்ள அவரது திருவுருவச்சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செய்தார்கள். நிகழ்ச்சியில் பெரம்பலூர் நாடாளுமன்ற உறுப்பினர் அருண் நேரு, மத்திய மாவட்டச் செயலாளர் வைரமணி, மாநகராட்சி மேயர் அன்பழகன், சட்டமன்ற கழக வேட்பாளர்கள் துரைராஜ், பாரிவள்ளல், கருணை ராஜா மற்றும் டோல்கேட் சுப்பிரமணி, தர்மன் ராஜேந்திரன், அண்ணாதுரை காஜாமலை விஜய், கண்ணன், சீனிவாச பெருமாள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.



திருவாரூர், மன்னார்குடி தொகுதிகளுக்கு கழக வேட்பாளர்களாக அறிவிக்கப்பட்டிருக்கும் மாவட்டக் கழகச் செயலாளர் பூண்டி கே.கலைவாணன்,முனைவர் டி.ஆர்.பி.ராஜா ஆகியோர் காட்டூரில் உள்ள அஞ்சுகத்தம்மையார் நினைவிடத்தில் மலர்தூவி மரியாதை செலுத்தினர். உடன் கழக நிர்வாகிகள் இருந்தனர்.